திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கலப்பு கால்நடை உற்பத்தியின் காரணமாக பால் உற்பத்தியானது எந்த அளவிற்கு அதிகமாயிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளில் இதைப் போன்று காளைமாடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பசுமாடுகளை அவர்கள் வெட்டுகிறார்கள். எனவே அவைகளை நாம் அதிகமாகப் பெறுவதற்கு அரசாங்கம் ஏதாவது கடிதப் போக்குவரத்து செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பற்றி எவ்வளவு பால் உற்பத்தி அடைந்திருக்கிறோம் என்ற கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு தனியாக வினா எழுப்பவும். அத்தோடு இதுபோன்ற திட்டத்தின் மூலமாக மேலும் கால்நடைகளை இறக்குமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அரிசி உரிமையாளர்கள் சங்கம், அரிசி வியாபாரிகள் சங்கம், கூலி அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் இவ்வாண்டு போதிய அளவிற்கு லெவி கொடுத்தும், அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக லெவி வசூல் செய்வதாலும், வாகனங்களை நிறுத்தித் தொல்லை தருவ தாலும், வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது என்று கருதி, சந்தைகளுக்கு வருகின்ற நெல்லைக் கூட 21ஆம் தேதியி லிருந்து வராமல் செய்த காரணத்தால் இலட்சக்கணக்கான மக்கள் அரிசி கிடைக்காமல் அவதிப்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக இந்த அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, ஆவன செய்வதோடு, 21ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து அவர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 30] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

ஆலைகளை மூடிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரிசி அங்கே சந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நேற்றையதினம் சட்டப் பேரவை உறுப்பினர்களான திரு. கணேசமூர்த்தி, திரு. கோவை இராமநாதன் ஆகியவர்கள் இது குறித்து பேசியிருக்கிறார்கள். அங்கேயுள்ள மொத்த வியாபாரிகளுக்கு சம்பா சீசனுக்காக 15,000 டன் லெவி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 15—3—1990 வரையிலும் அவர்கள் கொடுத்திருக்கின்ற லெவியின் அளவு 4,100 டன் ஆகும். எனவே எஞ்சியிருக்கின்ற சம்பா சீசன் முடிய இருக்கின்ற காரணத்தாலே அதிகாரிகள் விரைந்து லெவியை வசூலிக்க வேண்டுமென்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு எதிராக ஆலைத் தொழிலதிபர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஆலை தொழிலதிபர்களுக்கு தகவல் கொடுத்து நிலைமை எவ்வாறு இருந்தாலும் கூட, நேரடியாக இங்கே வந்தால் பேசி முடித்து வைக்கிறேன் என்ற தகவல் அனுப்பி அவர்களும் வர இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் ஆலைகளை மூடிவிட்ட காரணத்தாலே சந்தைக்கு அரிசி வரவில்லை, விலைவாசி ஏறியிருக்கிறது என்ற கூற்று தவறானதாகும். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அரிசி நிரம்ப ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு 'ஓப்பன் மார்க்கெட்'—வெளிச் சந்தை விலைக்கு கொடுப்பதற்கும் எல்லா கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே பொது மக்களுக்கு வழக்கம்போல் அரிசி உரிய விலையில், வெளிச் சந்தை விலையில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் விரைந்து பேசி சுமூகமாக இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு அரசு விரும்புகிறது. இது பொது விநியோகத் திட்டம் என்கின்ற காரணத்தாலே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியில் பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு நிறுத்தப்படுவது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ரீஜினல் இன்சினியரிங் கல்லூரியில் இதுவரை நடத்தப்பட்டு வந்த பகுதி நேர பி.இ. பட்டப்படிப்பை நிறுத்து